**நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - 2019**

-----------------------------------------------------------------------------------------------------------

நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA) ஆகியவற்றுக்கிடையே 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட 6006 - எல் கே ஆம் இலக்க நிதி உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்றிட்டத்தின் நிதி உடன்படிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சு செயற்றிட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் இலங்கை மத்திய வங்கி, பிணைகள் பரிமாற்றல் ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்பன செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளன. நிதி சந்தையின் செயற்திறனை அதிகரித்தல் மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகள் மற்றும் நபர்களிடையே நிதி சேவையின் பயன்பாட்டிற்காக பங்களிப்பு செய்தல் என்பன செயற்றிட்டத்தின் குறிக்கோள்களாகும். பெறுபேறினை அடிப்படையாகக் கொண்ட நிதியீட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட நடுத்தர அளவிலான மீள்கட்டமைப்பிற்காக பங்களிப்புச் செய்தல், கண்காணிப்பாளர்களின் நிறுவன இயலளவினைப் பலப்படுத்தல், பௌதீக மற்றும் கண்காணிப்பு சட்டகத்தினை மேம்படுத்தல் மற்றும் நிதி சந்தையின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல் போன்ற 4 அலகுகளின் கீழ் செயற்றிட்டத்தின் பணிகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. நிதி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 13,125 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியனானதுடன் செயற்றிட்டத்தின் மொத்தக் கிரயத்தினை சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளை 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதி ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்றிட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 2.1 நிதிச் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| திட்டமிடப்பட்ட வகையில் விநியோகிக்கப்பட்ட இணைக்கப்பட்ட முடிவுகளை அடையாமை மற்றும் பெறுகைச் செயற்பாடுகளின் தாமதம் போன்றவற்றால் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஒதுக்கமான ரூபா 680.4 மில்லியனில் ரூபா 331.18 மில்லியன் அதாவது 49 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தொகை மட்டுமே செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் | திட்டமிடப்பட்ட வகையில் விநியோகிக்கப்பட்ட இணைக்கப்பட்ட முடிவுகளை அடையாமை மற்றும் பெறுகைச் செயற்பாட்டின் தாமதம் போன்றவற்றால் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் பயன்படுத்த முடியாமல் போனமை. | அனைத்து இலக்குகளையும் நோக்கமாக அடைவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

3. **பௌதீகச் செயலாற்றல்**

3.1 **செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| கூறுகள் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக | | தாமதம் / கணக்காய்வு அவதானிப்பு | தாக்கம் | தாமதத்திற்கான காரணம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | | | | |
| | அலகு | அலகு | | | | | |
| **விநியோகிக்கப்பட்ட இணைக்கப்பட்ட குறிகாட்டிகள்** | 12 விநியோகிக்கப்பட்ட இணைக்கப்பட்ட முடிவுகள் (DLR) | 02 விநியோகிக்கப்பட்ட இணைக்கப்பட்ட முடிவுகள் | 10 விநியோகிக்கப்பட்ட இணைக்கப்பட்ட முடிவுகள் அடையப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் | செயற்திட்டத்தைத் தொடங்குவதில் ஏற்பட்ட தாமதம். | செயற்திட்டத்தை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டமையால் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் திட்டமிட்டவாறு DLRR ஐ அடைவதில் தாமதம் ஏற்பட்டது. | அனைத்து இலக்குகளையும் நோக்கமாக அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |